

எந்தளவுக்கு கடவுள் மீது அன்பு செலுத்துகிறோமோ அந்தளவுக்கு அவர் மீதான நம்பிக்கை வளரும். சிக்கலான–சிரமமான காலக்கட்டத்தைக் கடந்து நிற்கும் சமாதான சுரூபிகளான புனிதர்களை உருவாக்கியது, இந்த நம்பிக்கையே. கடவுள் எவ்வளவு அகழானவர் என்பதை கடவுளை அன்பு செய்பவர்கள் உணருவர். ஏனெனில் அவர் ஒருவரே சமாதானத்தை தர வல்லவர் என முழுமையான நம்பிக்கை வைத்துள்ளனர்.

– St. Alphonsus Liguori

கடவுளை நேசி, அயலானை நேசி என்ற இயேசு வழங்கிய இரட்டை சட்டம், நமக்கு மிகவும் பழக்கமான ஒன்று என்பதால் அதனை சாதாரணமாக எதார்த்தமாக எடுத்துக் கொள்கிறோம். நமக்குத் தெரிந்தவர்கள் மீது அன்பும் அக்கறையும் காட்டுவதில் நம்மில் பெரும்பாலோருக்கு சிரமம் ஏற்படுவதில்லை. ஆனால், இந்த சௌரியமாக நிலையை விட்டுச் செல்லும்படி இயேசு நமக்கு சவால் விடுக்கிறார்

- ஒதுக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கை கொடுங்கள்
- உதவி தேவைப்படுவோருக்கு உதவிக்கரம் நல்குவதற்கு நமது இயலாமையைப் போக்குங்கள்
- உங்களோடு கருத்துப் பிணக்குக் கொள்வோரை நேசியுங்கள்

“உண்மையான கரிசனம் யாரையும் ஒதுக்கி வைப்பதில்லை, யாரையும் சிறுமைப்படுத்தாது, ஒதுக்கி வைக்காது – ஒருவர் மாயமாகப் போவதையும் நல்லது எனக் கருதாது”, திருத்தந்தை பிரான்சிஸ்.

கொன்ரட் ரொய், சிறந்த ஓட்டப்பந்தய மாணவன், சமூக நெருக்குதல் மற்றும் மனஉளைச்சல் காரணமாக 2015ம் ஆண்டு ஜூலை மாதம் 13ம் தேதி தற்கொலை செய்து கொண்டான். பேரங்காடி கார் நிறுத்துமிடத்தில் கரிமிலவாயு காரணமாக அவன் இறந்தான். தொலைபேசி அழைப்பு மற்றும் குறுச்செய்தி வழியாக தற்கொலை செய்து கொள்ள அவனைத் தூண்டுவதில், மிட்சல் கர்ட்டர் ஆற்றியப் பங்கிற்காக 2017ம் ஆண்டு ஜூன் மாதம் 16ம் தேதி குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டாள்.

அவநம்பிக்கை கொள்ளும் ஒருவரை நாம் எவ்வாறு சமாளிக்க முடியும்? இணையம் என்ற ஒன்றின் வழி சமூக ஊடகம் மூலம் எப்போதும் தொடர்பில் இருக்கும் உலகத்தில், நாம் கரிசனம் மற்றும் நம்பிக்கையின் முகவர்களா? அல்லது எளிதாக மற்றவர்களைத் தீர்ப்பிடுபவர்களா? நாம் சொல்லும் சொல் அல்லது செயல் மற்றொரு நபர் மீது நீங்காத மனோவியல் வடுவை ஏற்படுத்தி விடும் என்பதை ஆராயமல், நாம் நினைப்பது சரி என பேசுபவர்களா?

“டிபியோ தொழுநோயோ கொடூரமான நோய்களல்ல, அன்பு செய்ய, ஆதரிக்க யாருமில்லை என்ற நிலையே மிகவும் கொடூரமானது. உடல் நோயை மருந்தால் குணப்படுத்தலாம், தனிமைக்கும் அவநம்பிக்கைக்கும் நிர்கெதிக்கும் ஒரே மருந்து அன்பு என்பது புனித அன்னை திரேசாவின் பொன்மொழிகளில் ஒன்று. உணவில்லாமல் இறப்போர் உலகில் பலர், அதே வேளையில் அநேக பலர் அன்பில்லாமல் இறக்கிறார்கள். அன்பில்லா இந்த வறுமை, ஒரு விநோதமான வறுமை. தனிமையால் வாடும் வறுமை மட்டுமல்ல ஆன்மீக வறுமையும்கூட. கடவுளுக்காக ஏங்குபவர்கள் மத்தியில், அன்பிற்காக ஏங்குபவர்களும் இருக்கிறார்கள்”

அயலானை அன்பு செய்வதன் மூலம் கடவுள் மீதான நமது அன்பு வெளிப்பட வேண்டும். இவ்வாறு கடவுள் நம்மீது ஏற்கனவே அன்பு காட்டியுள்ளார். இந்த நம்பிக்கை, நமது அன்புக்குரியவர்களுக்காகவும் மற்றவர்களுக்காகவும வட்டத்தைத் தாண்டி செயல்பட நம்மை விடுவிப்பதாக! ✛

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
Print: Steno Print Sdn Bhd
Design: The Mustard Seed Studio

INTERNAL CIRCULATION ONLY

NEWBEC

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

29 அக்டோபர் 2017
பொது காலம்
30ம் ஞாயிறு



# நம்பிக்கை நம்மை விடுவித்து முன்னெடுத்துச் செல்கிறது



## மினவுதல் மாதா தேவாலயம்

85A, ஜலான் யாம் துவான், 70000 சிரம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரு கூய்

*2017 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*

***எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்***

*2017 நவம்பர் (கார்த்திகை) மாதத்தின் கருப்பொருள்:*

*வேறுபட்ட கலாச்சாரங்கள் மற்றும் சமயங்களை ஈடுபடுத்துதல்*

***மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்***

***( 1848 – 2018 )***

**பங்கு அலுவலக நேரம்:**

**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** **பொதுக்காலம் (ஆண்டு ஒன்று) 30ஆம் ஞாயிறு சனி 28-10-2017 ஞாயிறு 05-11-2017**

**வி.ப 22: 20-26 தி.பா 17: 2-3a, 3bc-4, 47-51ab 1 தீமோ 1: 5c-10 மத் 22: 34-40**

**என் ஆற்றலாகிய ஆண்டவரே ! உம்மிடம் நான் அன்பு கூருகிறேன். ( சங் 17 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 28 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. கத்தரின்) | |
| ஞாயிறு | 29 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி தமிழ் ( பு. அந்தோணி )<br>திருப்பலி ஆங்கிலம் (பு. ரோஸ்)<br>திருப்பலி சீனமொழி<br>திருப்பலி (தே.மொ)<br>**மாலை 5.00 மணி ஒன்றுகூடலும் திருப்பலியும் - சுங்கை காடுட்** | மறைக்கல்வி (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| திங்கள் | 30 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 31 | காலை திருப்பலி நடைபெறாது | | *மாலை 7.30 மணி செபமாலையும் திருருச்சுற்றுபவணியும் (அனைத்து மொழி), மாலை 8.00 மணி திருப்பலி* |
| புதன் | 01 | அனைத்து புனிதர்கள் நாள் | | கா 6.45 (ஆ), கா 7.30 (கார்மேல் மடம்), மதி 2.00 கம் செபீர் மா 6.30 (சீ), மா 8.30 (த), மா 4.30 தித்தி (சீ) |
| வியா | 02 | இறந்த ஆத்துமாக்கள் நாள் | | கா 6.45 (ஆ), கா 7.30 (கார்மேல் மடம்), மா 6.30 (ஆ, சீ, தே.மொ), மா 8.30 (த), மா 4.30 தித்தி (சீ) |
| வெள் | 03 | காலை திருப்பலி நடைபெறாது | | ***மாலை 7.30 மணிக்கு திருமணி ஆராதனையும் திருப்பலியும் (ஆ) (முதல் வெள்ளிக்கிழமை)*** |

**பொதுக்காலம் 31ஆம் ஞாயிறு : ( ஆண்டு ஒன்று)**

**மலாக்கி 1: 14b-2:2b, 8-10 தி.பா 130: 1, 2, 3 1 தீமோ 2: 7b-9, 13 மத் 23: 1-12**

**என் நெஞ்சம் அமைதி பெற உம் திருமுன் வைத்துக் காத்தருளும் ( சங் 130 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 04 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. அல்பிரட்) | |
| ஞாயிறு | 05 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி தமிழ் ( பு. மரியா )<br>திருப்பலி ஆங்கிலம் (பு. மாகிரெட்)<br>திருப்பலி சீனமொழி<br>திருப்பலி (தே.மொ) | மறைக்கல்வி (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2017 அக்டோபர் (ஐப்பசி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

**1. ஆலய காணிக்கை** 21 / 22 அக்டோபர் ரிம: **8,741.00**
**தித்**தி ரி.ம 81.00

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**2. நற்கருணைப் பணியாளர்களின் கவனத்திற்கு:** வீடுகளில் உள்ள நோயாளிகளுக்கு நற்கருணை எடுத்துச் செல்லும் நற்கருணைப் பணியாளர்கள் நோயாளிகளின் பெயர்ப்பட்டியலை பங்கு அலுவலகத்தில் உடனடியாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**3. ஆலய பராமரிப்பு வேலைகளை செய்ய ஊழியர் தேவை**
பராமரிப்பு வேலைகளில் அனுபவம் வாயந்தவர்கள் இந்த பணிக்கு விண்ணப்பிக்கலாம். மேல் விவரங்களுக்கு பங்கு அலுவலகத்தை நாடவும்.

- **கல்லறைகள் ஆசீர்வதிப்பு நவம்பர் 2, 2017**
  மாலை 3.30 புனித மாற்கு கல்லறை
  மாலை 4.00 சிகாமட் கல்லறை
  **நீலாய் & செராஸ் கல்லறை காலை 9.00 மணி**

  29-10-2017(ஞாயிறு)
  மாலை 4.00 மணி மார்ஜெரி கல்லறை
  மாலை 4.30 மணி சாகா கல்லறை

  01-11-2017 (புதன்)
  பகல் 2.00 மணி கம்போங் செபீர் கல்லறை (ஓராங் அஸ்லி கம்போங்)

- **கத்தோலிக்க திருச்சபயில் ஆசீர்வாதம் பெறாத திருமணங்களை சீர்படுத்துதல்**
  உங்கள் குடும்பங்களில் கத்தோலிக்க திருச்சபையில் முறையாக திருமணம் செய்யாத தம்பதியர்கள் இருந்தால் அவர்களை பங்கு குருவானவரின் கவனத்திற்கு கொண்டுவாருங்கள். இவ்வாறு செய்யாமல் இருக்கும் கத்தோலிக்க நபர் திருச்சபையில் நற்கருணையல் பங்கெடுக்க முடியாது. எனவே ஆன்மீக வாழ்க்கையில் உங்களை வழிநடத்த குருவானவர் தயாராய் இருக்கிறார், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- **மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டு நிறைவை நோக்கிய பயணம்:** மறைக்கல்வி மாணவர்களின் கலாச்சாரப் படைப்பு: நவம்பர் 18, 2017(சனிக்கிழமை) மாலை 7.30 மணிக்கு: இடம்: மினவுதல் மாதா தேவாலய மண்டபம்: கருப்பொருள்: கலாச்சாரத்தில் ஒற்றுமை. அனைவரையும் வருகவென்று வரவேற்கிறோம்.

- **திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் அறிவிப்பு: நவம்பர் 19, 2017 - உலக ஏழைகளின் ஞாயிறு.** அன்று நம்முடைய ஆலய வளாகத்தில் 500 பேருக்கு உணவு வழங்கப்படுகிறது. நேரம்: 2.30 - 4.30 வரை: அனைத்து அதிச /வட்டார பொறுப்பாளர்கள் உங்களுக்குத் தெரிந்த நபர்கள் பெயர்களை உடனடியாக பங்கு அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும். இதைப் பற்றிய விவரங்கள் விரைவில் திரு. ஜொன் மெய்னார்ட் அவர்களால் வழங்கப்படும். பணமாகவோ பொருளாகவோ நன்கொடை வழங்க விருப்பம் உள்ளோர் பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

- **ஆலயத்தில் உள்ள மின்சார உபகரணங்கள்** (தொலைக்காட்சி, ஒளிகாட்சி திரை) இடி மின்னலால் பாதிப்படைந்துள்ளது. இதைச் சரிசெய்வது மிகப்பெரிய வேலை. இதைச் சீர்படுத்தும் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதன் தொடர்பாக பங்கு மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் சிரமத்திற்கு வருந்துகிறோம்.

- **ஆலயத்தில் உள்ள தொலைக்காட்சி மற்றும் ஒளிதிரைகள்** இடி மின்னல்களினால் பாதிப்படைந்துள்ளது. இந்த பாதிப்பு மிகப்பெரிய சீரமைப்பை எதிர்நோக்கியுள்ளதால் படிப்படியாக சீரமைக்கப்படும். இதனால் ஏற்படும் இடையூறுகளுக்கு வருந்துகிறோம்.

- **அக்டோபர் 31 – செபமாலை மாதத்தை நிறைவு செய்யுயும் வகையில்** திருப்பலிக்குப் பின்னர் ஒன்றுகூடல் நடைபெறும். நீங்கள் எடுத்துவரும் உணவுகளை ஆலய உணவு விடுதியில் வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். உணவு உபசரிப்பு மேற்பார்வை மரியாளின் சேனை பணிக்குழுவினர் மேற்கொள்வார்கள். அனைவரையும் இதில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

- **விசேச ஆசீர்: எஸ்.பி.எம். / எஸ்.டி.பி.எம் தேர்வு** எழுதும் அனைத்து மாணவர்களுக்கும் நவம்பர் 4/5 தேதிகளில் நடைபெறும் திருப்பலிகளின் போது விசேச ஆசீர் வழங்கப்படும்.
- **மறைக்கல்வி மாணவர்களுக்கு விசேச திருமுழுக்கு** நவம்பர் 11,2017 மாலை 7.00 மணி
- **குருக்களின் மாதாந்திர தியானம்: 14 & 15** நவம்பர் **APC, KL**
- **அதிச ஒருங்கிணைப்பாளர்களின் குழு கூட்டம்** (BECCOT) நவம்பர் 22,2017 மாலை 7.45

மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்.
மார்த்தா லிங் (இறப்பு: 24/10/2017)
**முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!**

**திருமண அருளடையாளக் கொண்டாட்டம்:**
அ) மெல்வின் விக்டர் & மெலிசா கிரேஸ்: 11/11/2017 மாலை 3.30
ஆ) சார்ல்ஸ் & சுசி 18/11/2017 காலை 11.00
இ) சிம்ப்சன் லியு & சுசி வோங் 18/11/2017 மாலை 3.30